# திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி மூலமும் உரையும்

## முகவுரை

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் இச் சிறு நூல் கருவைமா நகரில் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானைக் குறித்து அதிவீர ராமபாண்டியர் பாடியது.

அந்தாதியாவது, முன் நின்ற பாட்டின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின் வரும் பாட்டின் முதலாக வர, ஈறும் முதலும் மண்டலித்து முடியப் பாடும் ஒருவகைப் பிரபந்தம். பண்டையத் தண்டமிழ் இலக்கணமாகிய

இலக்கணமாகிய தொல்காப்பியத்தின்படி இந்நூல் ‘விருந்து’ என்னும் வனப்பமைந்த தொடர் நிலைச் செய்யுளாம். இது ‘விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே’ என்ற செய்யுளியற் சூத்திரத்தாலும், ‘விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரத் தொடுக்கப்படும் தொடர்நிலை மேலது’ என அதற்குப் பேராசிரியர் கூறிய உரையாலும் பெறப்படும். பிற்காலத்தார் இதனைச் சிறு காப்பியத்துள் அடக்குவர். பொருட்டொடர்பு நோக்காது, சொற்றொடர்பு ஒன்றே கொண்டு அமைந்தததாதலின் இது சொற்றொடர் நிலைச் செய்யுளாய் அடங்கும். ‘செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே’ என்பது தண்டியலங்காரம்.

அந்தாதி-அந்தத்தை ஆதியாக வுடையது; வேற்றுமைத்

வுடையது; வேற்றுமைத் தொகைப் புராணம் பிறந்துப் அன்மொழித் தொகை; ‘அந்த+ஆதி’ எனப் பிரிக்க. வடமொழித் தொடராதலின் ‘அந்தாதி’ எனத் தீர்க்க சந்தியாகப் புணர்ந்தது.

ஒரே வகைச் செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடரப் பாடுவதே பெரும்பாலும் அந்தாதி எனப்படும். நூற்றந்தாதி எனலுமுண்டு. மற்றிந் நூலோ, சந்தவேறுபாட்டால் பத்துவகையான செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடர அமைந்தது. ஆதலின் ‘பதிற்றுப்பத் தந்தாதி’ எனப்பட்டது. பதிற்றுப்பத்து என்பது ‘பத்து+இற்று+பத்து’ எனப் பிரியும்; ‘இற்று’சாரியை. பத்தாகிய பத்து என விரிதலால் பண்புத்தொகை நிலைத்தொடராகிப் பத்தினாற்

பண்புத்தொகை நிலைத்தொடராகிப் பத்தினாற் பெருக்கிய பத்து எனப் பொருள்படும். திருக்கருவைச் சிவபெருமானைக் குறித்தே இந்நூலாசிரியர் கலித்துறை யந்தாதி வெண்பாவந்தாதி என வேறிரண்டு அந்தாதிகள் பாடியுள்ளமையின், அவற்றினின்றும் இதனை வேறுபடுத்தப் பதிற்றுப்பத்தந்தாதி என்றார் எனலுமாம்.

கருவை என்பது பாண்டிய நாட்டில், ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் செல்லும் சாலையிடையே, சங்கரநயினார் கோயிலுக்கு வடக்கே சற்றேறக்குறைய காத தூரத்திலும் திருநெல்வேலிக்கு வடமேற்கே சற்றேறக்குறைய நாற்காத தூரத்திலும் உள்ள ஒரு சிவஸ்தலம். கரிவலம் வந்த நல்லூர் எனப்படும். குலசேகர பாண்டியன் வேட்டையாடச் சென்றபோது எதிர்ப்பட்ட ஓர் யானையைத் துரத்த, அது சிவாலயத்தை நாடி ஓடி, ஆண்டு எம்பெருமான் இருந்த புதரை

இவ்வூரில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானது திருநாமம், பால்வண்ணநாதர், திருக்களாவீசர், முகலிங்கர்.

படிகலிங்கமாதலின் பால்வண்ணநாதர் எனவும், களாமரம் தல விருட்சமாதலின் திருக்களா வீசர் எனவும், திருமுகம் விளங்கித் தோன்றும் இலிங்க வடிவமாதலின் முகலிங்கர் எனவும் பெயர் எய்தியது. இலிங்கம், அவ்வியக்த லிங்கம் எனவும், வியக்த லிங்கம் எனவும், வியக்தா வியக்த லிங்கம் எனவும் மூவகைப்படும். பீடமும் இலிங்கமுமா யிருப்பது அவ்வியக்த லிங்கம். எல்லா அவயவங்களும் வெளிப்படத் தோன்றும் மாகேசுவர வடிவங்கள் யாவும் வியக்த லிங்கங்கள். முகமும்

தோன்றும் இலிங்க வடிவம் வியக்தா வியக்தலிங்கம். எனவே திருக் கருவையிற் கோயில் கொண்ட இலிங்கமூர்த்தம் வியக்தா வியக்த லிங்கமாம். அம்மை பெயர் ஒப்பனை.

ஒப்பனை யம்மையுடன் வியக்தா வியக்த லிங்கவடிவமாகத் திருக்கருவைப் பதியில் கோயில் கொண்ட சிவபெருமானைக் குறித்துப் பதிற்றுப்பத் தந்தாதி என்னும் இந் நூலைப் பாடிய அதிவீர ராம பாண்டியர் பாண்டிய வமிசத்து அரசர்களில் ஒருவர். இற்றைக்குச் சற்றேறக் குறைய ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னே இருந்தவர். சரித ஆராய்ச்சியால் தெரியக் கிடக்கும் பாண்டிய வமிசாவளியில் இவரே கடைசியிற் காணப்படுகிறார். பன்னூறாண்டுகளுக்கு முன்னே செந்தமிழ் வளர்த்துச் சீருஞ் சிறப்பு முற்றிருந்த பாண்டியர்

இவர் இயற்றிய நூல்களால் இவர் நுண்ணறிவும் நிறைந்த கல்வித் தேர்ச்சியும் உடையரென்பது நன்கு விளங்குகின்றதோடு, இவருக்கு எய்திய கவித்திறம் இயற்கையின் எய்திய தொன்றெனபதும் விளங்கிக் கிடக்கிறது. ஆதலின் இவர் நுண்ணுணர்வு சிறக்க வாய்ந்தவராவர். இவர் முதன் முதல் இயற்றிய நூல் நைடதம் எனவும் இறுதியில் இயற்றிய நூல் இத் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி எனவும் கொள்ள அகச்சான்றுகள் உள்ளன. பெருக்கமஞ்சி அவற்றை விளங்க எடுத்துரைப்பதற்கில்லை. கூர்ந்து நோக்குவார்க்கு அவை நன்கு விளங்கும். கர்ண பரம்பரையாக வழங்கிவரும் அவரது வரலாறும் இக் கொள்கைக்கு இடந் தருகின்றது.

இவர் இயற்றிய நூல்கள் ஒவ்வொன்றும் சொல்வளமும் பொருள்வளமும் நிரம்பித் துளும்புவனவாயினும், உருக்கத்திலும் பத்தியிலும் இப்பதிற்றுப்பத்தந்தாதியே தலைசிறந்து நிற்கிறது. உள்ளத்தை உருக்கி உணர்வைக் கவர்வதில் ஒப்புயர்வற்ற திப்பிய நூலென ஆன்றோர் அனைவரும். உவந்து கொண்டாடும் திருவாசகம் என்னும் அரிய பெரிய அருள் நூலோடு இச் சிறு நூலை ஒப்பிட்டு, இதனைக் குட்டித் திருவாசகம் என வழங்கும் வழக்கொன்றே இதன் அருமையைப் புலப்படுத்தும்.

இந்நூலுக்கு யான் எழுதிய இவ்வுரையில், என் ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களின் கடைக் கணிப்பின் வலத்தாலும், அறிவுக்கறிவாய் உயிர்தோறும் உண்ணின்று